# முதலாம் பருவத் தொகுத்தறிவுத் தேர்வு

## தமிழ்

மதிப்பெண்: 60

வகுப்பு - ஆறு

நேரம்: 2 மணி

---

**I. சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக.** 10 × 1 = 10

1. ஏற்றத் தாழ்வற்ற ________________ அமைய வேண்டும்.

   அ) சமூகம் ஆ) நாடு இ) வீடு

2. தாய்மொழியில் படித்தால் ________________ அடையாளம்.

   அ) பன்மை ஆ) மேன்மை இ) பொறுமை

3. திராவிடத் தாய் என்ற நூலின் ஆசிரியர் ________________

   அ) பிச்ச மூர்த்தி ஆ) புதுமைபித்தன் இ) பாவாணர்

4. கதிரவனின் மற்றொரு பெயர் ________________

   அ) புதன் ஆ) ஞாயிறு இ) சந்திரன்

5. கிணறு என்பதைக் குறிக்கும் சொல் ________________

   அ) ஏரி ஆ) கேணி இ) குளம்

6. பறவைகள் இடப்பெயர்ச்சி செய்தல் ________________

   அ) வெப்பம் ஆ) வலசை இ) குளிர்கால நிலை

7. ஒருவருக்கு சிறந்த அணி ________________

   அ) காதணி ஆ) இன்சொல் இ) மாலை

8. நண்பர்களுடன் ________________ விளையாடு.

   அ) மாறுபாட்டு ஆ) தனித்து இ) ஒருமித்து

9. அவன் எப்போதும் உண்மையை ________________

   அ) உரைக்கின்றான் ஆ) உறைக்கின்றான் இ) உரைகின்றான்

10. மனித உருவம் கொண்ட ரோபோ ________________ உயரம் இருந்தது.

    அ) 6 அடி ஆ) 7 அடி இ) 8 அடி

**II. எவையேனும் நான்கனுக்கு விடையளி.** **4 × 2 = 8**

11. விடைக்கேற்ற வினா எழுதுக.

    (தமிழானது நீர், ஊர், வேல், வாள் என்று ஒப்பிடப்படுகிறது.)

12. சொற்றொடரில் அமைத்து எழுதுக. அ) தனிச்சிறப்பு

13. கலைச் சொல் தருக.

    அ) Internet ஆ) Satellite

14. பொருத்தமான சொல்லைக் கொண்டு நிரப்புக.

    மரங்களை வளர்த்து ________________ யைக் காப்போம். ________________ உரங்களைத் தவிர்த்து நிலவளம் காப்போம். (செயற்கை / இயற்கை)

15. பிரித்து எழுதுக.

    அ) நின்றிருந்த ஆ) அவ்வுருவம்

16. கோடிட்ட இடங்களை பொருத்தமான சொல் கொண்டு நிரப்புக.

    சட்டையில் உள்ள ________________ யை நீக்கு. (கறை / கரை)

**III. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.** **5 × 2 = 10**

17. பாரதிதாசன் தமிழுக்கு சூட்டியுள்ள பெயர்கள் யாவை?
18. நீங்கள் அறிந்த தமிழ்க் காப்பியங்களின் பெயர்களை எழுதுக.
19. சிலப்பதிகாரக் காப்பியம் எவ்வெவற்றை வாழ்த்தித் தொடங்குகிறது?
20. வலசையின் போது பறவையின் உடலில் ஏற்படும் மாற்றங்கள் யாவை?
21. அன்பிலார், அன்புடையார் செயல்கள் யாவை?
22. செயற்கைக் கோள் எவற்றுக்கு எல்லாம் பயன்படுகிறது?
23. மனித உருவம் கொண்ட ரோபோ குறித்து எழுதுக.

**IV. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.** **3 × 3 = 9**

24. தமிழ்க் கும்மி பாடலின் வழி நீங்கள் அறிந்து கொண்டவற்றை உம் சொந்த நடையில் தருக.
25. கல்பனா அத்தையின் கடிதக் கருத்துக்களைச் சுருக்கி எழுதுக.
26. சிட்டுக் குருவியின் வாழ்க்கை பற்றிச் சிறு குறிப்பு எழுதுக.
27. செயற்கைக் கோள் எவற்றுக்கு எல்லாம் பயன்படுகிறது.
28. உனக்குத் தெரிந்த தமிழ்வழி பயின்ற அறிவியல் அறிஞர் குறித்து எழுதுக.

**V. மனப்பாடப் பகுதி.** **4 + 2 = 6**

29. ‘தமிழுக்கும்’ எனத் தொடங்கும் ‘இன்பத்தமிழ்’ பாடலை எழுதுக.

30. ‘இனிய’ எனத் தொடங்கும் திருக்குறளை அடிமாறாமல் எழுதுக.

**VI. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி.** **4 × 2 = 8**

31. உயிர் எழுத்துகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

32. மாத்திரை என்றால் என்ன?

33. சார்பெழுத்துகள் எத்தனை? அவை யாவை?

34. சொற்களில் ஆய்த எழுத்து எவ்வாறு இடம் பெறும்?

35. மொழி முதலில் வரும் உயிர்மெய்யெழுத்துகள் யாவை?

36. சொல்லுக்கு இடையில் மட்டுமே வரும் எழுத்து யாது?

**VII. தேவையான இடங்களில் வல்லொற்று க், ச், த், ப் இட்டும் தேவையற்ற இடங்களில் வல்லொற்று நீக்கியும் எழுதுக.** **2 × 2 = 4**

37. தமிழ்க் கும்மி பாடலின் வழி நீங்கள் அறிந்து கொண்டவற்றை உம் சொந்த நடையில் தருக.

38. தமிழ் தாத்தா உ.வே.சா. அவர்கள் ஊர் ஊராகச் சென்று ஓலை சுவடிகளை சேகரித்தார்.

**VIII. கீழ்க்காணும் தொடர்களில் சரியான தொடரை எழுதுக.** **2**

39. அ) தமிழ் தாத்தா, தமிழ்த்தாத்தா

ஆ) புதுமைப்பித்தன், புதுமை பித்தன்

**IX. பொருத்தமான சொற்களால் கட்டங்களை நிரப்புக.** **3**

40. அ) புள் என்பதன் வேறு பெயர்

ஆ) பறவைகள் இடம் பெயர்தல்

இ) சரணாலயம் என்பதன் வேறு பெயர்